இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர் நேற்று (16.11.2023) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அங்காளம்மன் திருக்கோயிலில் புதுப்பிக்கப்பட்ட தங்கத்தேரின் வெள்ளோட்டத்தினை தொடங்கி வைத்தனர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் திருமதி சி.ஹரிப்ரியா, இணை ஆணையர் சிவக்குமார், அறங்காவலர் குழுத் தலைவர் சு.செந்தில் குமார், உதவி ஆணையர் திரு.இ.ஜீவானந்தம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (16.11.2023) கூட்டுறவுத் துறையின் சார்பில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட, சுருக்கெழுத்து தட்டச்சர்கள் (நிலை3) மற்றும் தட்டச்சு பணிக்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மருத்துவர் ந.கப்பையன், ஆகியோர் உள்ளனர்.

ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் 21 ஆம் தேதி -

பெருந்துறையில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்குகிறார்!

மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் சு.முத்துசாமி - என்.நல்லசிவம் அறிக்கை!

ஈரோடு, நவ. 17-

ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி இன்று (17-11-2023) நடைபெறுவதாக இருந்தது. இந்நிகழ்ச்சி வருகிற 21 ஆம் தேதி அன்று நடைபெறுகிறது. இதில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி சிறப்பிக்கிறார் ஈரோடு வடக்கு, தெற்கு மாவட்ட கழக செயலாளர்கள் சு.முத்து சாமி என்.நல்லசிவம் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:

ஈரோடு வடக்கு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பெருந்துறை சரளையில் 17.11.2023 வெள்ளிக்கிழமை அன்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரும் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற விருந்த மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும், கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அரசு நிகழ்ச்சியும் ஒத்திவைக்கப்பட்டு, அந்நிகழ்ச்சிகள் பெருந்துறை சரளையில் 21.11.2023 செவ்வாய்க்கிழமை அன்று மாற்றம் செய்யப்பட்டு கீழ்கண்டவாறு நடைபெறும்

21.11.2023 செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு

காலை 10 மணிக்கு இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம்

காலை 11 மணிக்கு பெருந்துறை சிப்காட் வளாகத்தில் அரசு நிகழ்ச்சி

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், செயல்வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் , பொது மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு ஈரோடு வடக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர்கள் சு. முத்துசாமி, என்.நல்லசிவம் ஆகியோர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்கள்.

நவம்பர் 20ஆம் தேதி மாலை குரோம்பேட்டையில் நடைபெறுகிறது

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் வருகிற 20.11.2023 திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் குரோம்பேட்டை, ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள ஆனந்தா திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. நவம்பர் 27ஆம் தேதி அன்று கழக இளைஞர்அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் கழக கொடி ஏற்றி நலத் திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மரக் கன்றுகள் நடுதல்.

2. டிசம்பர் மாதம் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாட்டில் திரளான இளைஞர் அணியினரை கலந்துக் கொள்ள செய்வது குறித்து.

3. சேலம் இளைஞர் அணி மாநாட்டையொட்டி இரு சக்கர வாகன பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் கழக இளைஞர் அணியினர் நம்முடைய மாவட்டத்தில் நவம்பர் 24, 25 தேதிகளில் பயணம் செய்வது குறித்து.

4. வாக்குச் சாவடி வாரியாக BLA 2 & BLC பாகமுகவர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சரி பார்க்கும் பணிகளை மேற்கொள்ளுதல்

5. கழக வளர்ச்சிப் பணிகள்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன்,
செயலாளர் - காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தலைமை! - பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை!

நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் பேச்சு, கட்டுரைப் போட்டி!

அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பரிசு வழங்கினார்!

நாமக்கல், நவ 17-

மாணவ நேசன் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நாமக்கல் ஸ்ரீ மஹாலில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கடல்அரசன் எஸ்.கார்த்திகேயன் வரவேற்றார். துணை அமைப்பாளர்கள் ஸ்ரீ சக்திவேல், மணிகண்டன், பி.சங்கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாமக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ப.சத்திய சீலன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்ச்சியை நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக மாநில மாணவர் அணி துணை செயலாளர் சேலம் ரா.தமிழரசன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

போட்டி நடுவராக திமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் புதுக்கோட்டை விஜயா பங்கேற்றார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மாநில தி.மு.க. மகளிர் தொண்டர் அணி செயலாளர் ப.ராணி, தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர் ப. கைலாசம், சட்டதிட்ட திருத்தக் குழு உறுப்பினர் நக்கீரன், தலைமைக் கழக பேச்சாளர் ராஜகோபால், மாவட்ட அவை தலைவர் மணிமாறன், மாவட்ட துணை செயலாளர் ராணி பெரியண்ணன்,

ஒன்றிய செயலாளர்கள் கே.பி.ராமசுவாமி, வி.கே. பழனிவேல், கே.பி.ஜெகநாதன், நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், பூபதி, சிவக்குமார், நகர மன்ற தலைவர் கலாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், பெ.ந.பழநிசாமி மற்றும் திமுக நிர்வாகிகள் மற்றும் 800க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இறுதியாக மாவட்ட துணை அமைப்பாளர் நா.கௌதம் ராம் நன்றி கூறினார்.

தொடர்ந்து மாலை மாணவ மாணவிகளுக்கு பரிசளிக்கும் விழா நடைபெற்றது இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்தார்.

பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் களவாணி அரசு பள்ளி மாணவர் மு. மாதேஸ்வரன் முதல் பரிசையும், ராசிபுரம் தூய இருதய மேல்நிலைப் பள்ளி மாணவி சி.ஸ்வேதா இரண்டாம் பரிசையும், வெண்ணந்தூர் அரசு பெண்கள் பள்ளி பா.ரித்திகா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை போட்டியில் செல்வம் கல்லூரி மாணவர் கோ.சக்தி முதல் பரிசையும், நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை பெண்கள் கல்லூரி மாணவி காயத்ரி இரண்டாம் பரிசையும், கவிஞர் ராமலிங்கம் பிள்ளை கல்லூரி மாணவி சந்தியா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

இதேபோல் பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் எருமப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர் சுரேஷ் குமார் முதல் பரிசையும், நாமக்கல் அரசு பள்ளி மௌலீஸ்வரன் இரண்டாம் பரிசையும், ஸ்ரீவித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி ரா.ஹிருத்திகா மூன்றாம் பரிசையும் பெற்றனர். அதேபோல் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் திருவள்ளுவர் அரசு கல்லூரி மாணவி சரண்யா முதல் பரிசையும், அறிஞர் அண்ணா கல்லூரி மாணவர் மோகன் குமார் இரண்டாம் பரிசையும், செல்வம் கல்லூரி மாணவி சந்தியா மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

தமிழ்நாடு முழுவதும் 100 வேலைவாய்ப்பு முகாம்கள்!

அரசு திட்டம்!

கடலூர், நவ. 17-

கலைஞர் அவர்களின் நூற்றாண்டு ('கலைஞர் 100") விழாவை முன்னிட்டு 2023-2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 100 சிறப்பு மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் நடத்தும் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் 25.11.2023 (சனிக்கிழமை) அன்று காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை கடலூர், மஞ்சக்குப்பம் செயின்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறவுள்ளது. இம்முகாமில் உற்பத்தி, தகவல்தொழில்நுட்பம், ஜவுளி, வங்கிசேவைகள், காப்பீடு, மருத்துவம், கட்டுமானம் உள்ளிட்ட முக்கிய துறைகளைச் சார்ந்த பல முன்னனி வேலையளிக்கும் நிறுவனங்கள் தங்களின் காலிப்பணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய உள்ளனர்.

நடைபெறவிருக்கும் இம்முகாமில் 8 ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டப்படிப்பு, பொறியியல், செவிலியர், ஆசிரியர், தொழிற்கல்வி போன்ற அனைத்து விதமான கல்வித்தகுதியினை உடையவர்களும் கலந்துக்கொண்டு பயன்பெறலாம். இச்சிறப்பு மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள விருப்பமுள்ள வேலையளிக்கும் நிறுவனங்களும், வேலைநாடுநர்களும் இணையதளத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்படுகிறது. முகாம் தொடர்பான கூடுதல் விவரங்களை அறிய கடலூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ அல்லது தொலைபேசி (04142-290039), 9499055908, 9499055907 வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம்.

எனவே கடலூர் மாவட்டத்தில் உள்ள வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்கள் 25.11.2023 (சனிக்கிழமை) நடைபெறும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்டாக்டர்.அ.அருண் தம்புராஜ், தெரிவித்துள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தில்

கடன்பெற சிறப்பு முகாம்கள்!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ 17-

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (TAMCO) மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்(TABCEDCO) மூலம் செயல்படுத்தப்படும் கடன் திட்டங்களான தனிநபர் கடன், சுயஉதவி குழுக்களுக்கான சிறு தொழில் கடன், கைவினை கலைஞர்களுக்கு கடன் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

மேற்படி,திட்டத்தினை சிறுபான்மையினர் மக்கள் அறிந்து கடன் பெற்று வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் வகையில் கடன் விண்ணப்பங்கள் பெறுவதற்கான சிறப்பு முகாம்கள் கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 22.11.2023 அன்றும், திருவட்டார் வட்டாட்சியர் அலுவலகத்தில் 23.11.2023 அன்றும், கிள்ளியூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 24.11.2023 அன்றும், விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் 28.11.2023 அன்றும், தோவாளை வட்டாட்சியர் அலுவலகத்தில் 29.11.2023 அன்றும், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் 30.11.2023 அன்றும் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடை பெறும். மேற்படி சிறப்பு முகாம்களில் இத்திட்டத்தின் கீழ் கடன் பெற விண்ணப்பங்கள் அளிக்கலாம்.

மேற்படி, தனிநபர் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது சாதிச்சான்று, வருமானச்சான்று, இருப்பிடச் சான்று, ஆதார் அட்டை நகல், தொழில் திட்ட அறிக்கை, கூட்டுறவு வங்கி புத்தக நகல் மற்றும் கல்வி கடனுக்கு விண்ணப்பிக்கும் போது பள்ளி மாற்று சான்றிதழ், உண்மை சான்றிதழ்(Bonafide) மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகிய ஆவணங்கள் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகளை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (15.11.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.தேன்மொழி, கறம்பக்குடி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.மாலா ராஜேந்திரதுரை, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி 76 (அ) வது வட்டம் கே.எம்.கார்டன் பகுதியில் கழக துணை அமைப்பு செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி, மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரிய அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மழைநீர் தேங்கி நிற்காத கூழலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர். 76 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.தமிழ்ச்செல்வி,வட்ட செயலாளர்கள் எஸ்.வெங்கடேசன் எஸ்.சசிகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.